த. நா.ச.பே. எண் : 014 நாள் : 22.03.2018

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (22.3.2018) சட்டப்பேரவையில், எதிர்க்கட்சி துணை தலைவர் திரு.துரைமுருகன் அவர்கள் தமிழ்நாட்டில் ரவுடிகள் கைது மற்றும் தமிழ்நாட்டின் வளம் குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார்கள்.**

---

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள், ரவுடிகளைப் பற்றி குறிப்பிட்டார். ரவுடிகள் என்பவர்கள் ஒரேநாளில் உருவாவது அல்ல. பல ஆண்டுகாலமாக, பல திருட்டுகள், கொலை வழக்குகளில் ஈடுபட்டவர்கள் தான் ரவுடிகள். உங்கள் ஆட்சியிலும் இருந்தவர்கள் தான், இப்போதும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது நாங்கள் கண்டுபிடித்திருக்கின்றோம். நீங்கள் கண்டுபிடிக்கவில்லை.

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களே, ரவுடிகளை கண்டுபிடித்தது நாங்கள். நீங்கள் கண்டுபிடிக்க தவறிவிட்டவர்கள். ஆகவே, இன்றைக்கு ரவுடிகள் தமிழகத்திலே எங்கெங்கே இருக்கிறார்கள் என்பதை எல்லாம் கணக்கிடப்பட்டு, இன்றைக்கு தமிழகத்திலிருந்து ரவுடிகள் வெளிமாநிலத்திற்கு தப்பி செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, எந்த மாநிலத்திலும் சரி, எந்த நாட்டிலும் சரி, எல்லா பகுதிகளிலும் இது நடந்து கொண்டிருக்கின்றன. அதை சரியாக கட்டுப்படுத்துகிறோமா என்பதைத் தான் நாம் பார்க்க வேண்டும். தமிழகத்தை பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மாவுடைய அரசால், சட்டம் ஒழுங்கு பேணிக் காக்கப்படுகின்றது. அமைதிப்பூங்காவாக தமிழகம் திகழ்கின்றது. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டு பார்க்கும்போது, தமிழகத்திலே குற்றங்கள் குறைந்திருக்கின்றது. குற்றங்களை நாம் அதிக அளவிலே

கண்டுபிடித்திருக்கின்றோம். அதைத்தான் நாம் பார்க்க வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் வளத்தைப் பற்றி சொன்னார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011 முதல் 2016 வரைக்கும் சிறப்பான ஆட்சி தந்த காரணத்தினாலே தான், தமிழக மக்கள், மீண்டும் 32 ஆண்டு காலத்திற்கு பிறகு ஆளுகின்ற கட்சியே ஆளுகின்ற ஒரு வாய்ப்பை கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே, அந்த சான்று மக்களிடத்திலே இருந்து எங்களுக்கு கிடைத்திருக்கின்றது. ஒரு அரசாங்கம் சிறந்த முறையிலே செயல்பட்டால் தான், மீண்டும் அந்த அரசாங்கம் ஆட்சிக்கு வர முடியும். அந்த சான்றை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு, மாண்புமிகு அம்மாவுக்கு தந்திருந்தார்கள்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, வளம் காணவில்லை என்று சொன்னார்கள். 2011 முதல் இன்றுவரை எவ்வளவு திட்டங்களை நாங்கள் செயல்படுத்தினோம் என்பதை எங்களுடைய ஓராண்டு சாதனை விழாவில் நாளை சொல்ல இருக்கிறோம். அதற்கு முன்பு, மாண்புமிகு அம்மாவுடைய ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் படித்து பார்த்திருந்தால் நிச்சயம் நன்றாக தெரியும். ஏனென்றால் அவர் அனுபவம் வாய்ந்தவர். மிகுந்த ஆற்றல் படைத்தவர். ஆகவே, அவருக்கு தெரியாத விஷயமே கிடையாது. அந்த வரிசையிலே இருக்கின்ற காரணத்தினாலே, இந்த வார்த்தையை அவர் பயன்படுத்துகின்றார்.

உண்மையிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து அவர்கள் மறைகின்ற வரை எண்ணற்ற திட்டங்களை நாட்டு மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு கல்வியிலே மிகப் பெரிய புரட்சி ஏற்பட்டுள்ளது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக தான் இன்றைக்கு, உயர்கல்வி படிக்கக்கூடிய

மாணவர்களின் எண்ணிக்கை இந்தியாவிலேயே உயர்ந்திருக்கின்றது. 2011–ல் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. அப்போது உயர்கல்வி படிக்கின்றவர்களின் எண்ணிக்கை 100–க்கு 21 சதவிகிதம். இன்றைக்கு, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே ஏற்படுத்திய புரட்சி, கல்வி பயில கொடுத்த உதவித்தொகையின் வாயிலாக, அதிக கல்லூரிகளை தமிழகத்திலே ஏற்படுத்தியதன் வாயிலாக, இன்றைக்கு கல்வியில் உயர்ந்து, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள் அதிகயளவிலே உயர்கல்வி படிக்கிறார்கள் என்று சொன்னால், இது வளம் அல்லவா. இதைவிட என்ன வேண்டும். இன்னும் ஏராளமாக சொல்லிக் கொண்டே போகலாம். நீங்கள் வந்து வளம் இல்லை என்று சொல்கிறீர்களே, தமிழகத்தில் அதிக வளங்கள் அம்மாவுடைய ஆட்சியிலே கிடைத்திருக்கிறது. அம்மாவுடைய அரசினால் கிடைத்திருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9